සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
Year End Evaluation

පිළිතුරු පත්‍රය
Marking Scheme

ශ්‍රේණිය / தரம் / Grade : 10
විෂය / பாடம் / Subject : இஸ்லாம்
පත්‍රය / வினாத்தாள் / Paper : 1

## பகுதி- 01

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | ***2*** | 11. | ***3*** | 21. | ***2*** | 31. | ***4*** |
| 02. | ***3*** | 12. | ***4*** | 22. | ***4*** | 32. | ***1*** |
| 03. | ***2*** | 13. | ***1*** | 23. | ***1*** | 33. | ***3*** |
| 04. | ***2*** | 14. | ***4*** | 24. | ***2*** | 34. | ***4*** |
| 05. | ***3*** | 15. | ***1*** | 25. | ***4*** | 35. | ***4*** |
| 06. | ***1*** | 16. | ***3*** | 26. | ***1*** | 36. | ***4*** |
| 07. | ***4*** | 17. | ***2*** | 27. | ***3*** | 37. | ***2*** |
| 08. | ***4*** | 18. | ***4*** | 28. | ***2*** | 38. | ***3*** |
| 09. | ***3*** | 19. | ***3*** | 29. | ***1*** | 39. | ***1*** |
| 10. | ***2*** | 20. | ***4*** | 30. | ***3*** | 40. | ***2*** |

(1 X 40 = 40)

பகுதி- 02

I. கதரிய்யா, ஜபரிய்யா, முர்ஜிஆ, முஃதஸிலா,

II. சிறு தொடக்கு, பெருந்தொடக்கு

III. பயன்படுத்தப்பட்ட நீர்: குல்லதைன் அளவிலும் குறைந்த மிகச் சுத்தமான நீரை பர்ழான குளிப்பு மற்றும் வுழு செய்தல் போன்ற பர்ழான கடமைகளுக்கு பயன்படுத்தினால் அந்நீர் அவ்வாறு அழைக்கப்படும்.

IV. அல்குர்ஆனும் ஸுன்னாவும்

கிதாப்- வேதம், ஹிக்மா- ஞானம்

V. தாருல் பனா- அழிவடையும் உலக வாழ்வு, தாருல் பகா- நிலையான மறுமை வாழ்வு

VI. இஸ்திஹ்ஸான், இஸ்திஸ்லாஹ், இஸ்திஸ்ஹாப், உர்ப், அ்“ராஇஉஸ் ஸாபிகா, கவ்லுஸ் ஸஹாபி…

VII. கோட்பாட்டு ரீதியானவை, நடைமுறை சார்ந்தவை

VIII. புலமை சார்ந்தவை, உடலுழைப்பு சார்ந்தவை

IX. நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

X. வஹீ மத்லுவ்- ஓதிக் காண்பிக்கப்பட்ட வஹீ, வஹீ கைரு மத்லுவ்- ஓதிக் காண்பிக்கப்படாத வஹீ

(2 X 10 = 20)

02. I. இபாதத், இமாரத், கிலாபத் (02 புள்ளிகள்)

II. உள்ளத்தைப் பக்குவப்படுத்தி இறையச்சத்தை ஏற்படுத்தல், இறை நெருக்கத்தை ஏற்படுத்தல், பாவ காரியங்களிலிருந்து தவிர்ந்து வாழ பயிற்றுவித்தல், தியாகம், பொறுமை, பிறர் நலன் பேணல் போன்ற நற்பண்புகளை வளர்த்தல், இறை திருப்தியைப் பெற்று சுவனம் நுழைய வழியமைத்தல்… (இவற்றில் ஏதாவது மூன்று குறிப்பிடப்பட்டிருந்தால் 3 புள்ளிகள்)

III. ‘ரீஆவின் அனுமதி, தூய்மையான எண்ணம் (இஃலாஸ்), ‘ரீஆ வரையறைகளை மீறாதிருத்தல், அடிப்படை வணக்க வழிபாடுகளுக்கு தடையின்றி இருத்தல், நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல்… (ஐந்து பண்புகளை குறிப்பிட்டு சிறிது விளக்கியிருந்தால் 5 புள்ளிகள்) (மொத்தம;: 2+ 3+ 5= 10)

03. I. தஸ்கியா என்பதன் மொழிக்கருத்து: பரிசுத்தப்படுத்தல், சீர்படுத்தல். பரிபாஷைக் கருத்து: உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தல் அதாவது தஸ்கியதுந் நப்ஸைக் குறிக்கும் 02 புள்ளிகள்)

II. குர்ஆன், ஹதீஸ் காட்டித்தரும் வழிமுறைகளைப் பின்பற்றுதல்- முகஸ்துதி, பெருமை, பொறாமை போன்ற இழிகுணங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல்- பர்ளான கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுதல் - நபிலான வணக்கங்களில் ஈடுபடுதல் - திக்ர், அவ்ராதுகளில் ஈடுபடுதல் - அதிகமாக அல்குர்ஆன் ஓதுதல் - தவ்பா செய்தல்… (இவற்றில் ஏதாவது மூன்று குறிப்பிடப்பட்டிருந்தால் 3 புள்ளிகள்)

III. ஒன்று: நப்ஸுல் அம்மாரா பிஸ் ஸூஃ - தீமையை ஏவும் உள்ளம், நன்மை செய்யத் தூண்டாத உள்ளம், இச்சைக்கும் ஷைத்தானுக்கும் அடிமைப்பட்ட உள்ளம்.

இரண்டு: நப்ஸுல் லவ்வாமா: தன்னையே நொந்து கொள்ளும் உள்ளம். இச்சைகளுக்கு எதிராக போராடுகின்ற பாவங்களில் ஈடுபட்டால் அதற்காக மனம் வருந்தி கைசேதப்படும் உள்ளம்.

மூன்று: அமைதியடைந்த உள்ளம். பதற்றம், தடுமாற்றமின்றி அமைதியடைந்த நிலையில் காணப்படும் இந்த உள்ளத்தில் நன்மைக்கான தூண்டுதல்களே மிகைத்துக் காணப்படும். (மூன்றையும் குறிப்பிட்டு

விளக்கியிருப்பின் 5 புள்ளிகள்)
(மொத்தம்: 2+ 3+ 5= 10)

04. I. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை, வரலாறு ஸீரா எனப்படும். (02 புள்ளிகள்)

II. ஹரமான பொருளைக் கொண்டதாக இருக்கக் கூடாது (உ-ம்: மதுபானம்), ஹராமாக்கப்பட்ட செயல்முறைகள் மூலமானதாக இருக்கக் கூடாது (உ-ம்: வட்டி, இலஞ்சம்), மக்களுக்கு பாதிப்பையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் இருக்கக் கூடாது (உ-ம்: பதுக்கல், கலப்படம்), பொதுச் சட்டங்களை மீறும் செயல்முறையாக இருக்கக் கூடாது (உ-ம்: கறுப்புச் சந்தை, கடத்தல்), நல்லொழுக்க விழுமியங்களுக்கு முரணாக இருக்கக் கூடாது (உ-ம்: பொய், மோசடி) (ஏதாவது மூன்றை குறிப்பிட்டிருப்பின் மூன்று புள்ளிகள்)

III. தெய்வீகத்தன்மை, எவருக்கும் அநீதி இழைக்காமை, நெகிழ்வுத்தன்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர்செய்தல், சமூக நலனுக்கும் தனி மனித நலனுக்குமிடையே இணக்கம் காணல், ஆத்மிக, லௌகிக தேவைகளை கவனத்திற் கொள்ளல்… (இவற்றில் ஏதாவது ஐந்தைக் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள்) (மொத்தம;: 2+ 3+ 5= 10)

05. I. மன்னன் துல்கர்னைன் (02 புள்ளிகள்)

II. வாங்குவோன்- விற்போன், வியாபாரப் பொருள், ஈஜாப்- கபூல் (03 புள்ளிகள்)

III. கொடுக்கல்- வாங்கல் வணக்கமாகி விடும், வாங்குவோர்- விற்போருக்கிடையில் உறவு பேணப்படும், வியாபாரம் ஸ்திரத்தன்மையடையும், வீண் குற்றச்சாட்டுக்களிலிருந்து பாதுகாப்பு கிடைத்தல், ஹராமான கொடுக்கல் வாங்கலிலிருந்து மீட்சி கிடைக்கும் (ஐந்தைக் குறிப்பிட்டிருப்பின் 5 புள்ளிகள்)

(மொத்தம்: 2+ 3+ 5= 10)

06. I. ஸூரா லுக்மான், ஸூரா ஃபுர்கான் (02 புள்ளிகள்)

II. தூய எண்ணத்தோடு தவ்பா செய்தல், தான் செய்த பாவங்களை விட்டும் முற்றாக நீங்குதல், தான் செய்த பாவங்களை எண்ணி வருந்தி அதற்காக கைசேதப்படல், செய்த பாவம் சக மனிதனோடு தொடர்புபட்டிருந்தால் அவனிடம் மன்னிப்புக் கோரிய நிலையில் இறைவனிடம் நெருங்குதல். (3 புள்ளிகள்)

III. வஹி கைரு மத்லுவ் என்றால் ஓதிக் காண்பிக்கப்படாத வஹியாகும். இவை பல்வேறு நிலைகளில் இறைதூதர்களுக்கு கிடைக்கப் பெற்றன. உதாரணங்கள்:- இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது மகன் இஸ்மாயீலை (அலை) குர்பான் செய்வதாக கண்ட உண்மைக் கனவு, மூஸா (அலை) அவர்களுடன் துர்ஸினா மலைப் பக்கத்தில் அசரீரி மூலம் இறைவன் உரையாடியவை, ஸகரிய்யா (அலை) அவர்களுக்கு சமிக்ஞை மூலம் அல்லாஹ்வைத் தொழவும் புகழவும் கற்றுக் கொடுக்கப்பட்டமை, நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் ஹதீஸ் அல்லது ஸுன்னா (5 புள்ளிகள்) (மொத்தம்: 2+ 3+ 5= 10)

07. **I. உஸ்மான் (ரழி) அவர்களது கால அல்குர்ஆன் தொகுப்புப் பணி:**

இவர்களது காலப் பிரிவில் ஆர்மேனியா, அஸர்பைஜான் பிரதேங்களில் முஸ்லிம்கள் யுத்தத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து ஆல்குர்ஆனை வெவ்வேறான முறைகளில் ஓதினர். தாம் ஓதும் முறையே சரியானது என்றும் வாதித்தனர். இதனை அவதானித்த ஹுதைபதுல் யமானி (ரழி) அவர்கள் கலீபாவுக்கு முறைப்பாடு செய்தார். உடனடியாக செயற்பட்ட கலீபா உஸ்மான் ஸைத் இப்னு ஸாபித் (ரழி) தலைமையில் குறைரீயரை உள்ளடக்கிய குழுவை நியமித்தார். அவர்கள் அபூபக்ர் (ரழி) கால முஸ்ஹபையும் குறைரீகளின் மொழி வழக்கையும் கருத்திற் கொண்டு எட்டுப் பிரதிகளை தயாரித்தனர். அவை ஒவ்வொரு மாகாணத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன் காரிகளும் அனுப்பி வைக்கப்பட்டனர். அதன் பிரகாரமே ஓத வேண்டுமென்றும் முன்னர் வைத்திருந்த ஏனைய பிரதிகளை எரித்துவிட வேண்டுமென்றும் கலீபா கட்டளை பிறப்பித்தார். இதனால் எல்லோரும் ஒரே விதமாக அல்குர்ஆனை ஓதும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக உஸ்மர் (ரழி) 'ஜாமிஉல் குர்ஆன்' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார். (5 புள்ளிகள்)

**II. அஜ்னபி- மஹ்ரமி வரையறை பேணுதல்:** குடும்ப உறவின் காரணத்தால் அல்லது திருமண உறவு அல்லது பால்குடி உறவின் காரணத்தினால் ஒரு பெண்ணுக்கு அல்லது ஆணுக்கு நிரந்தரமாகவே திருமணம் முடிக்க தடைசெய்யப்பட்ட ஆண் அல்லது பெண் மஹ்ரமி எனப்படுகிறார். திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டோர் அஜ்னபி ஆவர்.

அஜ்னபிகளோடு பழகும்போது வரையறைகள் கண்டிப்பாக பேண வேண்டும்.பார்வையைத் தாழ்த்துதல், பெண்கள் அவ்ரத்தை முழுமையாக மறைத்தல், நடை உடை பாவனை பேச்சு என்பவற்றில் வரையறை பேணுதல், ஆண்களின் உணர்வுகளைத் தூண்டும் காரியங்களிலிருந்து தவிர்ந்திருத்தல், ஆண்- பெண் தனித்திருக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல்… முதலான வரையறைகளைப் பேணுவதன் மூலம் அஜ்னபி- மஹ்ரமி வரையறைகளைப் பின்பற்ற முடியும். (5 புள்ளிகள்)

**III. தொழுகையின் இம்மை, மறுமைப் பயன்கள்:**

இறைவனுடன் உரையாடுச் சந்தர்ப்பமாக அமைதல், இறை சிந்தனையும் உள அமைதியும் ஏற்படல், இறையருள் கிட்டல், சுவனத்தின் திறவுகோலாக அமைதல், உறுதிமிக்க மனநிலையும் தயாள சிந்தனையும் உருவாகும், பாவச் செயல்களிலிருந்து தடுக்கும், பாவமன்னிப்பைப் பெற்றுத் தரும், மறுமையில் சாட்சியாய் அமைதல், அக- புறச் சுத்தத்தை ஏற்படுத்தும், நரகை விட்டும் காப்பாற்றும். (5 புள்ளிகள்)

**IV. உடற் பயிற்சி செய்வது பற்றிய இஸ்லாமிய வழிகாட்டல்:**

உடலை சீரான கட்டுக்கோப்பில் வைத்திருப்பது இபாதத் ஆகும். இதற்கு உடற்பயிற்சி இன்றியமையாதது. உடற்பயிற்சி செய்வதை இஸ்லாம் ஊக்கப்படுத்தியுள்ளது. பிள்ளைகளுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்குமாறும் அம்பெறியவும் குதிரைச் சவாரிசெய்யவும் கற்றுக் கொடுக்குமாறு நபியவர்கள் போதித்தார்கள். (5 புள்ளிகள்)

(மொத்தம்: 5+ 5= 10)

**இறுதிப் புள்ளி:** **வினாப் பத்திரம் I (40 புள்ளிகள்)**

**வினாப் பத்திரம் II (முதலாம் வினா- 20 புள்ளிகள்)**

**(ஏனைய நான்கு வினாக்களுக்கு- 40 புள்ளிகள்)**

**மொத்தம் (100 புள்ளிகள்)**